# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness – PW14

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : மாதையன் | | Caste | : |
| S/o. | : முத்து | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed on 19.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது கருமலைகூடல் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022ம் வருடம் தேவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 06.03.2022ம் தேதி தேவூர் காவல் நிலைய குற்ற எண்.21/2022 பிரிவு 302 இதச வழக்கில் இறந்துபோன ஆனந்தன் என்பவரது பிரேதத்தை சேலம் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை முடித்து 10.15 மணிக்கு கடவுச்சீட்டு பெற்று 2.30 மணிக்கு அரசு மருத்துவமனையில்

மருத்துவரிடம் கடிதத்தை கொடுத்து, சவக்கிடங்கில் இருந்த ஆனந்தனின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். மருத்துவர் பிரேத பரிசோதனை செய்தார். அப்போது அவருக்கு உதவியாக நான் இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்து என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிரேதத்தை என் வசம் பெற்று அவரது குல வழக்கப்படி அடக்கம் செய்து கொள்ள இறந்தவரின் மகனிடம் ஒப்படைத்தேன். பின்னர் பிரேதத்தின் மீதிருந்த ரத்தக்கறை படிந்த வாடாமல்லி கலர் பெட்சீட் ஒன்று, ரத்தக்கறை படிந்த ப்ரவுன் கலர் ஜட்டி ஒன்று, ரத்தக்கறை படிந்த பளூ மற்றும் கருப்பு கலர் கட்டம் போட்ட லுங்கி ஒன்று ஆகியவற்றை என் வசம் பெற்று 06.03.2022ம் தேதி மாலை நிலையம் வந்து தனி அறிக்கையுடன் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். தனி அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும். மேற்படி சான்று பொருட்கள் முறையே சா.பொ.8 முதல் 10 ஆகும்.

பிரேத பரிசோதனையின்போது உள் உறுப்புகளையும் விசராவையும் ரத்த மாதிரியைபெற்று 07.03.2022ம் தேதி சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் கொடுத்து ஒப்புகை ரசீது பெற்று நிலையம் ஆஜராகி அறிக்கை செய்தேன். இது குறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

காவல் ஆய்வாளர் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தார், அவருடன் யார் யார் வந்தார்கள் என்றால் காலை 7.00 மணிக்கு வந்தார். அவருடன் நிலைய எழுத்தர், உதவி எழுத்தர், தட்டச்சர்

ஆகியோர் வந்தார்கள். ஆய்வாளர் அரசு மருத்துவமனையிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பி சென்றார் என்றால் 10.20 மணிக்கு சென்றார். ஆனந்தனின் பிரேதத்தின் மீது எடுக்கப்பட்ட உடைமைகளை எத்தனை மணிக்கு எங்கு வைத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் மாலை 6.00 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து தனி அறிக்கையுடன் ஒப்படைத்தேன். பிரேத விசாரணை நடைபெறும்போது ஆய்வாளருடன் நான் இருந்தேன் என்றால் சரி. அப்போது காவலர்கள் யார் யார் இருந்தார்கள் என்றால் நிலைய எழுத்தர் செல்வம், உதவி எழுத்தர் சரவணன், தட்டச்சர் பாக்கியராஜ் ஆகியோர் இருந்தார்கள்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.